**ஏக்கருக்கு 74 மூட்டை! இயற்கை விவசாயத்தில்.. இன்னும் ஒரு சாதனை!**



கர்னல். தேவதாஸ், “அடிப்படையில் நான் ஒரு இன்ஜினியர். இரண்டு முதுகலைப் பட்டங்களை வாங்கின நான், தமிழக பொதுப்பணித் துறையில் வேலை பார்த்தேன். பிறகு, இந்திய ராணுவத்தில் சேர்ந்து கரடனல் பொறுப்பு வரைக்கும் உயர்ந்தேன். பிறகு, விருப்ப ஓய்வு வாங்கிக்கொண்டு வந்து, சிறிது நிலத்தை வாங்கி விவசாயம் செய்யத் தொடங்கினேன். 2007 ம் வருடம் சென்னையில் தமிழக அரசு நடத்தின விவசாயக் கண்காட்சியில் கலந்துகிட்ட பிறகு தான் இயற்கை விவசாயத்தைப் பற்றி தெரியவந்தது. ‘ஜீரோ பட்ஜெட்’ பயிற்சி வகுப்புக்களில் கலந்துகிட்டு, ஜீரோ பட்ஜெட் முறை விவசாயத்திற்கு மாறிவிட்டேன். சென்ற வருடமே ‘அங்கக வேளாண்மை விவசாயி’ என்று முறைப்படி அரசாங்கத்திடம் பதிவும் செய்து கொண்டேன்.

கிச்சடிச் சம்பா நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 74 மூட்டை மகசூல் எடுத்து ‘அங்கக வேளாண்மையில் மாநிலத்திலேயே அதிக மகசூல் எடுத்தவர்’ என்று பாராட்டி முதல் பரிசை வழங்கியிருக்கிறது தமிழக வேளாண்மைத் துறை.தொடர்ந்து காய்கறி உள்பட நிறைய பயிர்களை இயற்கை முறையில் செய்து கொண்டிருக்கிறேன். அதன் மூலமாக அற்புதமான விளைச்சல் கிடைக்கிறது. இந்த விஷயத்தை விவசாய அதிகாரிகள், மாவட்ட ஆட்சியர்கள் என்று அனைவரிடமும் கூறினேன். ஆச்சர்யம் அடைந்த மாவட்ட ஆட்சியர் ஜெயராமன் உடனடியாக என்னுடைய பண்ணையிலேயே இயற்கை விவசாயக் கருத்தரங்கம் நடத்த ஏற்பாடு செய்வதேடு உதவி கலெக்டரையும் அனுப்பி வைத்தார். நான் மேற்கொண்டிருக்கின்ற இயற்கை விவசாயத்தை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்ள மாவட்ட வேளாண்மைப் பயிற்சி அரங்கில் இருந்து இரண்டு குழுக்கள் வந்து சென்றது. பிறகு உழவர் சந்தையில் இயற்கைக் காய்கறிகளை விற்பனை செய்வதற்காக ஒரு கடையையும் கொடுத்தார்கள். இது எல்லாம் நான் நேசிக்கின்ற என் இயற்கை விவசாயத்திற்கு கிடைத்த மரியாதை.

**அரிசியா விற்றால்தான் அதிக லாபம்!**

“சென்ற வருடம் பிசான பருவத்தில் (நவம்பர் முதல் பிப்ரவரி வரை) பத்து ஏக்கர் நிலத்தில் ‘கிச்சடிச் சம்பா’ பயிரிட்டிருந்தேன். அதுதான் அமோக மகசூலை அள்ளிக் கொடுத்து, முதல் பரிசையும் வாங்கிக் கொடுத்திருக்கு. ஒற்றை நாற்று முறையில் சாகுபடி செய்ய வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், நடவு நேரத்தில் ஆட்கள் கிடைக்கமாட்டார்கள் என்று, வழக்கமான முறையிலேயே நடவு செய்தேன். ஒற்றை நாற்று முறையில் சாகுபடி செய்திருந்தால் இன்னும் அதிக மகசூல் பெற்றிருக்கலாம்.நெல்லை அப்படியே

விற்காமல் அரிசியா மாத்தித்தான் விற்பனை செய்றது என்னுடைய வழக்கம். நெல்லை அரிசியாக மாற்றும்போது மொத்த நெல்லில் 60% அரிசி கிடைக்கும். அந்த அரிசியை உழவர் சந்தையில் இருக்கிற கடையில் வைத்து கிலோ 40 ரூபாய் என்று விற்பனை செய்றேன். அதனால் எனக்குக் கூடுதலாக லாபம் கிடைக்கிறது. பாரிசு பெறும் அளவிற்கு அதிக மகசூல் பெற்றுத் தந்த தன்னுடைய சாகுபடித் தொழில்நுட்பம் பற்றிக் கூறினார்.

**விதைநேர்த்தி அவசியம்!**

“நிலத்தை உழவு செய்து தானிய வகைகள், எண்ணெய் வித்துக்கள், பயிறு வகைகள், கொளுஞ்சி, சணப்பு விதைகளைக் கலந்து ஏக்கருக்கு இருபத்தைந்து கிலோ வீதம் விதைக்க வேண்டும். அவை பூக்கும் சமயத்தில் அப்படியே மடக்கி உழுது, ஆட்டுக்கிடை போட்டு, மறுபடியும் உழவு செய்ய வேண்டும். ஏக்கருக்கு நூறு கிலோ மட்கிய தொழுவுரம், பத்து கிலோ கனஜீவாமிர்தம், ஆகியவற்றை அடி உரமாக போட்டு, தொழி கலக்க வேண்டும். 20 கிலோ நெல் விதையை பீஜாமிர்தத்தில் விதை நேர்த்தி செய்து நாற்றுப் பாவ வேண்டும். நாற்றுகளைப் பதினைந்து நாளில் பறித்து, வழக்கமான பாணியில் நடவு செய்ய வேண்டும்.

**ஏக்கருக்கு 74 மூட்டை!**

நடவு செய்த 15, 30, 45 மற்றும் 60 – ம் நாட்களில் ஏக்கருக்கு 200 லிட்டர் ஜீவாமிர்தத்தைப் பாசனத் தண்ணீரில் கலந்து கொடுக்க வேண்டும். அதோடு, 15 நாட்களுக்கு ஒரு முறை 5 லிட்டர் ஜீவாமிர்தத்தை விசைத் தெளிப்பான் மூலமாக தெளிக்க வேண்டும். மொத்தம் மூன்று முறை இப்படி தெளித்தால் 100 லிட்டர், இரண்டாவது தெளிப்பில் 150 லிட்டர், மூன்றாவது தெளிப்பின் போது 200 லிட்டர் என்கிற அளவில் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் ஜீவாமிர்தத்தைக் கலந்து தெளிக்க வேண்டும். இப்படிச் செய்தால் நோய்த் தாக்குதலே சுத்தமாக இருக்காது.

பயிர் பொதிப் பருவத்தை (பால் பருவம்) அடைந்ததும், இரண்டரை லிட்டர் புளித்த மோர், 250 கிராம் சூடோமோனஸ் இரண்டையும் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து விசைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். பின்னர் ‘காய்ச்சலும் பாய்ச்சலுமாக’ பாசனம் செய்தால் போதும். இடையில் இரண்டு முறை கைக் களை மட்டும் எடுக்க வேண்டியிருக்கும். இதையெல்லாம் செய்தால் பயிரின் வளர்ச்சி அதிமாக இருக்கும்.சாகுபடித் தொழில்நுட்பங்களை பார்த்த வேளாண்மை அதிகாரிகள் ‘அங்கக பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளுமாறு கூறினார்கள்’. ஏப்ரல் மூன்றாம் தேதி அன்று அரசு அதிகாரிகள் அரசு சாராத பிரதிநிதிகள் அனைவரும் கூடிநிற்க கிச்சடிச் சம்பா அறுவடை நடந்தது. ஒரு ஹெக்டருக்கு 11,215 கிலோ மகசூல் கிடைத்தது. ஏக்கருக்கு 4,486 கிலோ! மூட்டையாக கணக்குப் போட்டால் ஏக்கருக்கு 74 மூட்டை (60 கிலோ மூட்டை). இது வழக்கமான மகசூலை விட மிக மிக அதிகம்.

| இயற்கை முறையில் ஒரு ஏக்கரில் கிச்சடிச் சம்பா சாகுபடி செய்வதற்கான செலவு, வரவு கணக்கு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| விதை | 750 | |

| | | |
|---|---|---|
| உழவு | 1,000 | |
| கிடை | 800 | |
| தொழுவுரம் மற்றும் உயிர் உரங்கள் | 500 | |
| கொம்புத் தூள் | 1,800 | |
| தொழி கலக்க | 1,300 | |
| வரப்புக் கட்ட | 700 | |
| நடவு | 1,750 | |
| களை | 1,200 | |
| இடுபொருள் தெளிப்பு கூலி | 600 | |
| தண்ணீர் கட்ட | 2,100 | |
| அறுவடை | 2,300 | |
| அரிசியாக மாற்றினால் 2,694 கிலோ x 40 ரூபாய் | | 1,07,760 |
| மொத்தம் | 14,800 | 1,07,760 |
| நிகர லாபம் | | 92,960 |

தேவதாஸ் நெல்லை அரிசியாக மாற்றி விற்கிறார். அதற்கான அரவை கூலியை, தவிடு மற்றும் உமி ஆகியவையே ஈடுகட்டி விடுவதால் அது கணக்கில் சேர்க்கப்படவில்லை. ஒரு ஏக்கரில் இவருக்கு 74 மூட்டைகள் கிடைத்த போதும் இவருக்கு கூடுதல் வருவாய் கிடைத்திருப்பதற்கு கிச்சடி சம்பா எனும் உயர் ரக அரிசியும் ஒரு காரணம். இடுபொருட்களைப் பொறுத்த வரை தோவதாஸீக்கு 3,100 ரூபாய்தான் செலவு.

**தொடர்புக்கு:**

திரு. கர்னல். தேவதாஸ்,
என்.ஜி.ஓ. காலனி,
திருநெல்வேலி.
அலைபேசி: 94431 - 55309